**பிப்ரவரி – 19**

# TNPSC துளிகள்

- ஐக்கிய நாடுகள் மூலதன மேம்பாட்டு நிதியமானது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரீத்தி சின்ஹா என்பவரை தனது நிர்வாகச் செயலாளராக நியமித்துள்ளது.
- டாடா குழும நிறுவனமான டாடா எலக்ட்ரானிக்ஸ் ஆனது கைபேசி உதிரி பாகங்களின் தயாரிப்பு வசதியை அமைப்பதற்காக தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## புதிய தொழிற்துறை மற்றும் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) தொடர்பான கொள்கைகள்

- பிப்ரவரி 16 அன்று தமிழ்நாடு அரசானது ஒரு புதிய தொழிற்துறைக் கொள்கையை அறிவித்துள்ளது.
- இது பின்வரும் 4 முக்கிய குறிக்கோள்களை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
  - 2025 ஆம் ஆண்டிற்குள் 10 இலட்சம் கோடி மதிப்புள்ள (135 பில்லியன் அமெரிக்க டாலர்) முதலீடுகளை ஈர்த்தல்
  - இந்தக் கொள்கை காலத்தில் உற்பத்தித் துறையில் 15% வருடாந்திர வளர்ச்சியை அடைதல்
  - 2030 ஆம் ஆண்டிற்குள் மாநிலத்தின் பொருளாதாரத்தில் உற்பத்தித் துறையின் பங்களிப்பை தற்பொழுதுள்ள 25% என்ற அளவிலிருந்து 30% ஆக அதிகரித்தல்.
  - 2025 ஆம் ஆண்டிற்குள் 20 இலட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்

### *MSME கொள்கைகள்*

- மேலும் முதல்வர் அவர்கள் MSME/ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் ஆகியவற்றிற்காக ஒரு உறுதியான சூழலமைப்பை வழங்குவதற்காக MSME கொள்கையையும் வெளியிட்டு உள்ளார்.
- இது பின்வருவனவற்றை இலக்காக நிர்ணயித்துள்ளது.
  - 2025 ஆம் ஆண்டிற்குள் ரூ.2 இலட்சம் கோடி அளவில் புதிய முதலீடுகளை ஈர்த்தல்
  - 20 இலட்சம் மக்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.
- புதிய MSME மற்றும் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் ஆகியவற்றிற்குச் சுயச் சான்றளிப்பு அடிப்படையில் 3 ஆண்டு காலத்திற்கு உருவாக்கம் மற்றும் செயல்பாடு ஆகியவற்றிற்கு ஒப்புதல் அளிக்கப் படுவதிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.
- இந்த அலகுகள் 3 ஆண்டு காலம் முடிவடைந்த 1 ஆண்டிற்குள் கட்டாயமாக ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டும்.
- இந்தப் புதிய கொள்கையானது MSME நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு மானியங்களுக்கான உச்ச வரம்பை அதிகரித்துள்ளது.
- மேலும் MSME நிறுவனங்களுக்குத் தயார் நிலையில் உள்ள வசதிகள்/இடங்கள், காப்பிடம் மற்றும் மனை ஆகியவை மேம்படுத்தப்பட்டு குறைந்த காலக் குத்தகைக்கு வழங்கப்படும்.

# தேசியச் செய்திகள்

## தனியார்மயமாக்கலுக்காக திருத்தங்கள்

- பொதுத் துறை வங்கிகளின் (PSB) தனியார்மயமாக்கல் வசதிக்காக பின்வரும் 2 சட்டங்களின் மீது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன.
    - வங்கியியல் நிறுவனங்கள் (நிறுவனங்களின் கையகப்படுத்துதல் மற்றும் மாற்றம்) சட்டம், 1970 மற்றும்
    - வங்கியியல் நிறுவனங்கள் (நிறுவனங்களின் கையகப்படுத்துதல் மற்றும் மாற்றம்) சட்டம், 1980
- இந்த 2 சட்டங்கள் 2 நிலைகளில் வங்கிகளின் தேசியமயமாக்கத்திற்கு வழிவகை செய்துள்ளன.
- தற்பொழுது PSB வங்கிகளை தனியார்மயமாக்கல் செய்வதற்காக இந்தச் சட்டத்தின் விதிகள் மாற்றப்பட உள்ளன.

## பே ஜல் சர்வேக்சன்

- மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகம் சோதனை அடிப்படையிலான பே ஜல் சர்வேக்சன் என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளது.
- இது ஜல் ஜீவன் திட்டம் – நகர்ப்புறம் என்பதின் கீழ் தொடங்கப்பட்டுள்ளது.
- இது சமமான நீர் விநியோகத்தை உறுதி செய்வதற்காகவும் கழிவு நீரை மீண்டும் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்காகவும் நகரங்களில் மேற்கொள்ளப்பட உள்ளது.
- மேலும் இது நீர் நிலைகளை அடையாளம் காணவும் உதவ இருக்கின்றது.
- இந்த சர்வேக்சன் ஆனது பட்லாபூர், ஆக்ரா, சுரு, புவனேஸ்வர், மதுரை, கொச்சி, பாட்டியாலா, சூரத், ரோத்தக் மற்றும் தும்கூர் ஆகிய 10 நகரங்களில் தொடங்கப்பட உள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## விரிவான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்பு ஒப்பந்தம்

- மத்திய அமைச்சரவையானது இந்தியா மற்றும் மொரீஷியஸ் ஆகியவற்றிற்கிடையே விரிவான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்பு ஒப்பந்தம் என்ற ஒன்றில் கையெழுத்திடுவதற்கு தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.
- இது இந்தியா மற்றும் மொரீஷியஸ் ஆகியவற்றிற்கிடையேயான ஒரு வகையான தடையில்லா வர்த்தக ஒப்பந்தமாகும்.
- இது இரு-வழி வணிகத்தை ஊக்கப்படுத்துவதற்காக விதிகளைத் தளர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## கரிமம் குறைந்த புதிய வகை கான்கிரீட்

- ACC தயார் நிலை கான்கிரீட் நிறுவனமானது "EcoPact" என்ற பெயர் கொண்ட தனது கரிமம் குறைந்த புதிய வகை கான்கிரீட்டை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது உயர் செயல்பாடு, நீடித்த மற்றும் சுழல் கட்டமைப்பிற்கான ஒரு பசுமை கான்கிரீட் ஆகும்.

- இது முதல் நிலையில் மும்பை மற்றும் ஹைதராபாத்தில் அறிமுகப்படுத்தப் பட்டு உள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## பருப்பு வகைகள் – இந்தியாவின் பங்களிப்பு

- உலக அளவில் பருப்பு வகைகளின் மொத்த உற்பத்தியில் இந்தியாவின் பங்களிப்பு ஏறத்தாழ 24% ஆகும்.
- மேலும் உலக அளவில் பருப்பு வகைகளின் மிகப்பெரிய உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் நாடு இந்தியா ஆகும்.
- நாட்டின் பருப்பு வகைகளின் உற்பத்தியானது கடந்த 5 முதல் 6 ஆண்டுகளில் 14 மில்லியன் டன்னிலிருந்து (140 இலட்சம் டன்) 24 மில்லியன் டன்களாக (240 இலட்சம் டன்) வளர்ச்சி அடைந்துள்ளது.


# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இந்தியாவின் புதிய உடனடி குறுஞ்செய்தி அனுப்புதல் தளம்

- தேசிய தகவல் மையமானது "சந்தேஸ்" (Sandes) என்ற ஒரு செயலியைத் தொடங்கி உள்ளது.
- இந்த குறுஞ்செய்தி அனுப்புதல் தளமானது வாஸ்ட்அப் செயலியைப் போன்றதாகும்.
- இதனை எந்தவொரு நபராலும் எந்தவொரு தகவல் தொடர்பிற்காகவும் பயன்படுத்த முடியும்.
- இந்தச் செயலியில் பதிவு செய்வதற்கு கைபேசி எண் அல்லது மின்னஞ்சல் முகவரி மட்டுமே தேவைப்படும்.

## டைகர் எக்ஸ் – 1

- ஹீண்டாய் மோட்டார் குழுமமானது நடக்கும் மகிழுந்துவின் செயல்பாட்டை அடிப்படையாகக் கொண்ட ஒரு இயந்திரத்தை வடிவமைத்துள்ளது.
- இது "மாற்றம் பெற்ற நுண்ணறிவு கொண்ட நிலத்தின் மீதான பயண இயந்திரம்" என்ற விரிவாக்கத்தைக் கொண்ட "டைகர்" (TIGER - Transforming Intelligent Ground Excursion Robot) என்று அழைக்கப் படுகின்றது.



- இந்த இயந்திரமானது சவாலான நிலப் பகுதியில் பயணம் செய்யும் திறன் கொண்ட சக்கரங்களைக் கொண்டுள்ளது.
- அதி செயல்திறன் கொண்ட இந்த இயக்க வாகனமானது நிலை குலைந்தாலோ அல்லது கடினமான நிலப் பகுதியில் பயணம் செய்யத் தேவைப்பட்டாலோ, அதில் நடக்கும் திறன் கொண்டு விளங்குகின்றது.
- இதனை ஆளில்லா விமானத்துடன் இணைக்கப்பட முடியும்.
- அவசரக் காலங்களில் சரக்குகளை விநியோகம் செய்யவும் வேண்டி இதனைப் பயன்படுத்த முடியும்.
- பூமியில் மட்டுமல்லாது இதரக் கோள்களிலும் இதனைப் பயன்படுத்த முடியும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## முதலாவது உயர்த்தப்பட்ட வனவிலங்கு பெருவழிப் பாதை

- தில்லி – டேராடூன் விரைவுச் சாலையானது நாட்டின் முதலாவது உயர்த்தப்பட்ட வனவிலங்கு பெருவழிப் பாதையாக விளங்குகின்றது.
- இந்தத் திட்டமானது 12 கிலோ மீட்டர் வரை பரந்து விரிந்து, 6 வழிப் பாதையாக ஒரு உயர்த்தப்பட்ட வனவிலங்கு பெருவழிப் பாதையைக் கொண்டிருக்கும்.
- இந்த விரைவுச் சாலை வனவிலங்குப் பகுதிகளைக் கடக்கும் பகுதிகளைக் கொண்டு இருப்பதால், இது வன விலங்குகளைப் பாதுகாப்பதின் மீது கவனம் செலுத்துகின்றது.




## ஆலிவ் ரிட்லீ ஆமைகள் – அடை காத்தல்

- மிகப் பெரிய அளவிலான ஆலீவ் ரிட்லீ அடை காத்தல் நிகழ்வானது புதுச்சேரி கடற்கரையில் தொடங்கியுள்ளது.
- புதுச்சேரிக் கடற்கரையானது இந்த வகை ஆமைகளால் ஒடிசாவிற்குச் செல்ல பயன்படுத்தப் படும் வலசைப் பாதை வழிகளில் ஒன்றாகும்.
- இந்தக் கடற்கரையானது வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம், 1972 என்ற சட்டத்தின் முதலாவது அட்டவணையில் பட்டியலிடப் பட்டுள்ளது.
- இந்த ஆமைகள் பொதுவாக பசிபிக் ரிட்லீ கடல் ஆமைகள் எனப்படுகின்றன.
- இது ஐயூசிஎன் (IUCN) பட்டியலில் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய ஒரு இனமாகப் பட்டியலிடப் பட்டுள்ளது.

- மேலும் இது CITES நிறுவனத்தின் பட்டியல்-I என்பதிலும் பட்டியலிடப்பட்டுள்ளது.




# மாநிலச் செய்திகள்

## “மா” உணவகங்கள்

- மேற்கு வங்க மாநிலமானது அம்மாநிலத்தில் உள்ள ஏழைகளுக்கு மிகக் குறைந்த விலையில் உணவை அளிப்பதற்காக ஒரு புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இது “மா” உணவகங்கள் என்று அழைக்கப்படுகின்றது.
- இது ஏழைகளுக்கு மதியத்தில் மாநில அரசால் மானிய விலையில் வழங்கப் படுகின்றது.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★